

Madurai Symposium 2007

Advancing Development

Building Alliances

24-29 September



---

செய்தியறிக்கை

செப்டம்பர் 25, 2007

# 'மானாவாரி விவசாயத்தை இலாபகரமானதாக மாற்ற வேண்டும்'

- வேளாண் கருத்தரங்கில் வலியுறுத்தல்

மதுரைக் கூடலரங்கம் 2007 நிகழ்வில் இன்று நடைபெற்ற கருத்தரங்குகளில் ஒன்றான மானாவாரி விவசாயிகளின் சம்மேளனத்தில் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும், முனைவருமான போ.சுப்பிரமணியன் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார். அவர் தனது தலைமை உரையில், 'இந்திய விவசாயம், 68 விழுக்காடு மழையை மட்டுமே நம்பியுள்ள மானாவாரி நிலங்களைக் கொண்டுள்ளது. இந்திய நாட்டின் பெரும்பாலான பகுதிகள் ஐம்பது நாட்களுக்கும் குறைவாகவே மழை வளம் பெறுகின்றன. அதிலும் கடந்த பத்து ஆண்டுகளில் பொழியும் பருவமழையானது, பயிரிடும் காலங்களில் தேவைக்கேற்ப கிடைக்கவில்லை. மேலும் விவசாய விளைபொருட்களுக்கு சரியான விலை கிடைக்காத காரணத்தால், உழவர்கள் தங்கள் நிலங்களைத் தரிசாக்கிவிட்டு, அருகில் உள்ள நகரங்களுக்கு இடம் பெயரும் நிலை ஏற்பட்டு வருகிறது' என்றார். மானாவாரி விவசாய மேம்பாட்டுத் திட்டம் ஒரு பார்வை என்ற தலைப்பில் உரையாற்றிய தானம் அறக்கட்டளையின் திட்டத்தலைவர் பழனிச்சாமி, 'மானாவாரி விவசாயத்தை ஒரு இலாபகரமான வாழ்வதாரமாக மாற்றுவது மற்றும் மானாவாரி விவசாயத்தை ஆர்வத்துடன் மேற்கொள்ளச் செய்யும் வழிமுறைகளைக் கண்டறிந்து இளைய தலைமுறையை ஊக்குவிப்பது போன்றவற்றை முதன்மை நோக்கமாகக் கொண்டு தானம் அறக்கட்டளையால் 2002ஆம் ஆண்டு மானாவாரி விவசாய மேம்பாட்டுத் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது. கரிசல் பூமியான திருமங்கலம் (மதுரை மாவட்டம்), செம்மண் நிலங்களைக் கொண்ட நாட்ராம்பள்ளி (வேலூர் மாவட்டம்), கடலோரப் பகுதியான வேதாரண்யம் (நாகப்பட்டினம் மாவட்டம்), சவ்வாது மலைப்பகுதியிலுள்ள புதூர்நாடு (திருவண்ணாமலை மாவட்டம்) ஆகிய பகுதிகளில் இத்திட்டம் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக தேசிய மானாவாரி நீர்வடி மேம்பாட்டுத் திட்டம் என்ற நடுவணரசின் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது' என்றார்.

மானாவாரி விவசாய நிலங்களைக் கொண்ட மேற்காணும் ஊர்களில் செயல்பட்டு வரும் உழவர் குழுக்கள் மூலம், பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மானாவாரி விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாக நடைபெற்ற பணிகளை மீள்பார்வை செய்தல், உழவர் குழுக்களை ஒருங்கிணைத்தல், எதிர்வரும் காலங்களுக்கான வளர்ச்சி இலக்கினை முடிவு செய்தல், அதனை அடைவதற்கு வளர்ச்சிப் படிகளை வகுத்தல் போன்ற பல்வேறு அடிப்படையான விசயங்கள் மானாவாரி விவசாயிகளின் சம்மேளனத்தில் பகிர்ந்து கொள்ளப்பட்டன. தேனி மாவட்ட விவசாயிகள் சங்கக் கூட்டமைப்புக் குறித்து அதன் தலைவர் வேலுச்சாமி பகிர்ந்து கொண்டார். இறுதியாக நடைபெற்ற சம்மேளனத்தின் குழு விவாதங்களை தானம் அறக்கட்டளையின் திட்டத் தலைவர்கள் சிங்கராயரும், பழனிச்சாமியும் நெறிப்படுத்தினர்.

மேற்காணும் செய்தியறிக்கையைத் தங்கள் நாளேட்டில் வெளியிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி